ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம்.

வினா எண். 495—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் I. C. D. S. (ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம்) திட்டம் எத்தனை யூனியன்களில் அமுல் நடத்தப்படுகின்றது?

(ஆ) இதற்கு மத்திய அரசின் உதவித் தொகை எவ்வளவு?

(இ) இத் திட்டத்தை மாநிலம் முழுவதும் அமுல் நடத்தும் உத்தேசம் உண்டா?

(ஈ) ஆம் என்றால் எப்போது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) மாநிலத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம் (I. C. D. S.) 3 இடங்களில் அமுல் நடத்தப்படுகிறது. அவையாவன:—

(1) சென்னை, (2) நிலக்கோட்டை பஞ்சாயத்து யூனியன்—மதுரை மாவட்டம், (3) தளி பஞ்சாயத்து யூனியன்—தர்மபுரி மாவட்டம்.

(ஆ) இதற்கு மத்திய அரசின் சராசரி வருட உதவித் தொகை:—

	(ரூபாய் இலட்சத்தில்)
ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டம் (I.C.D.S.)	13
பெண்களுக்கான செயல்முறை கல்வி ..	4

(இ) தற்சமயம் இல்லை.

(ஈ) கேள்வி எழவில்லை.

திரு. மு. ப. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தில் கொடுக்கப்படும் சலுகைகள் குடும்பக் கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கும் கொடுக்கப்படுகிறதா? அது நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: இந்த ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் கருத்தரித்த தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் இணைத்துத்தான் குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி போதிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்டத்தை சென்னையிலும், மதுரையிலும் நடத்துகிறார்கள். அதற்காக வருடத்திற்கு 15 லட்சம் ரூபாய் வரையில் செலவிடப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குழந்தைகள் அதிகமாக இருக்கின்ற வட ஆற்காடு மாவட்டத்திலேயும் இந்தத் திட்டத்தை அரசு செயல் படுத்துமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்றால் குடும்பக் கட்டுப்பாட்டை மீறுகிறார்கள் என்று தான் அர்த்தம்.

திரு. பி. துரைராஜ் : ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தின் கீழ் நெல்லை மாவட்டத்திலே சங்கரன்கோவில் தொகுதியில் வாழும் மக்கள் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள், ஆகவே, ஆங்கே இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, தற்போது 1982-83 ஆம் ஆண்டு, 1983-84 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டம் 36 இடங்களில் செயல்படுத்தப்படுவது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திருச்சியில் உள்ள கோழி உற்பத்தி கழகத்திற்கு சொந்தமான குளிர்சாதன கிடங்கு.

* வினா எண். 496—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோழி உற்பத்தி கழகத்துக்கு சொந்தமாக திருச்சியில் உள்ள குளிர் சாதன கிடங்கு பயன்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : திருச்சியிலிருந்து குளிர்சாதன இயந்திரம் பழுதடைந்திருந்ததால் அங்குள்ள குளிர் சாதனக் கிடங்கு செயல்படவில்லை. அந்த இயந்திரம் சென்னை அடையாறிலுள்ள முட்டை விற்பனைப் பிரிவிற்குக் கொண்டு வரப்பட்டு பழுது பார்க்கப்பட்டு 17—2—1982 முதல் செயல்பட்டு வருகிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.